| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **03/01/2024** | முதல் | **07/01/2024** |
| | அறிக்கை எண் : | **001/ 2024** | வெளியீட்டு நாள் : | **02/01/2024** | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°- 33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (28.12.2023 **முதல்** 01.01.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 04-01-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28/12 | 29/12 | 30/12 | 31/12 | 01/01 | **தேதி** | **நாள்-1** 03/01 | **நாள்-2** 04/01 | **நாள்-3** 05/01 | **நாள்-4** 06/02 | **நாள்-5** 07/01 |
| 0.0 | 0.0 | 2.3 | 0.1 | 0.0 | மழை (மி.மீ) | 2 | 2 | 2 | 3 | 4 |
| 33 | 32 | 31 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 32 | 31 | 31 | 29 | 29 |
| 25 | 23 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 22 | 21 | 21 | 20 |
| 5 | 6 | 5 | 4 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 4 | 7 | 8 |
| 77 | 83 | 81 | 80 | 77 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 65 | 74 | 67 | 58 | 58 | | 70 | 70 | 70 | 70 | 70 |
| 10 | 9 | 7 | 5 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 8 | 8 | 10 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜனவரி 3, 4, 5, 6 மற்றும் 7ம் தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 29°-32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

அடுத்த 5 நாட்களுக்கு மிக குறைவான அளவு மழையே எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் மக்காசோளம் மற்றும் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் அறுவடை பணிகளுக்கு திட்டமிடலாம்.

தொடர்ந்து மேக மூட்டத்துடன் கூடிய ஈரப்பதமான வானிலை நிலவுவதால் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 10-15 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் ஒட்டும்பொறி அட்டைகளை வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தையும் ஒரு ஏக்கருக்கு 5-10 என்ற எண்ணிக்கையில் ஊதா

கண்காணிக்கவும்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 8 முதல் 10 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தக்காளி, நெல், கால்நடை.**

**தக்காளி:**
தக்காளி பயிரில் இலைப்பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இலைகளின் மேற்பரப்பில் வெண்ணிறத் திட்டுகள் காணப்படும், மலர்கள் முதிர்ச்சி அடைவதற்கு முன்பாக விழுந்துவிடும், குருத்து காய்ந்துவிடும்,

மேலும் இலைப்பேன்கள் புள்ளி வாடல் வைரஸ் நோயை பரப்புகிறது.

இவற்றை கட்டுப்படுத்த தாக்கப்பட்ட செடிகளை வேருடன் பிடுங்கி அழிக்கவும்,

ஒரு ஹெக்டேருக்கு 15 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் ஒட்டு பொறியை அமைக்கவும்,

மேலும் ஒரு ஏக்கருக்கு 50கிராம் என்ற அளவில் தையோமெத்தாக்சம் மருந்தினை தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**நெல்:**
நெற்பயிரில் தற்போது இலைக்கருகல் நோயின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இது பெரும்பாலும் நெற்பயிர் நட்ட 3-4வது வாரங்களில் தோன்றுகிறது.

இந்நோய் ஒருவகை பாக்டீரியாவால் உண்டாகின்றது, இது முழுச் செடியையோ அல்லது ஒரு சில இலைகளையோ வாடச் செய்யும், இலைகள் மஞ்சள் நிறமாகி பின்னர் கருகியது போன்று தோன்றும். பாசன நீர், மழை மற்றும் காற்று மூலம் பரவுகிறது. பறித்த நாற்றின் சேதமடைந்த வேரின் மூலமாக பாக்டீரியாக்கள் நெற்பயிரின் உட்புகுந்து பயிரைத் தாக்குகின்றன.

இந்நோயினை கட்டுப்படுத்த 5 சத வேப்பங்கொட்டைச் சாறு அல்லது 3 சத வேப்பெண்ணெய் கரைசல் அல்லது 10 சத வேப்பம் பிண்ணாக்குச் சாறு அல்லது 20 சத சாணக்கரைசல், இவைகளில் ஏதேனும் ஒன்றை நோய் தோன்றும் தருணத்திலும் மீண்டும் 10 நாட்கள் இடைவெளியில் மறுமுறையும் தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**
இரவு நேர வெப்பநிலை மிகக் குறைந்து காணப்படுவதால் கால்நடைகளை பாதுகாப்பாக கொட்டைகைகளில் கட்டி வைக்கவும்.

கொட்டகையை சுற்றி சாக்கு பைகளை கொண்டு மறைத்து கட்டவும்.

கால்நடைகளை, சூரியன் உதித்து 2 மணி நேரம் கழித்து மேச்சலுக்கு அனுப்ப வேண்டும்.